முச்சந்தி முரளி



"அவர் சொன்னது நடந்தாத்தான் அதிசயம், வார்த்தை காத்தில பறக்கிறதெல்லாம் சகஜம் தானே"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 207

வியாழக்கிழமை
20 ஜூன் 2024

# காணிகள் விடுவிப்பு இணக்கப்பாடில்லை

## ரணிலின் அறிவிப்பு காற்றில் பறக்கிறது



யாழ்ப்பாணம், ஜூன் 20

வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் வசம் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடல்களில் இணக்கப்பாடு எட்டப்படவில்லை. காணிகளை விடுவிப்பதற்குப் பதிலாகப் புதிதாக காணிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதிலேயே சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அக்கறை காண்பிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ☞15

## அமைச்சுப் பதவியை உடன் கைவிடுக!

### விஜயதாஸவுக்கு ரணில் அழுத்தம்

கொழும்பு, ஜூன் 20

அமைச்சுப் பதவியை துறக்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸவுக்கு, ஜனாதிபதி ரணில் அழுத்தம் கொடுத்துள்ளார் என்று ☞15

## ரணிலின் காலத்தில் கடன்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 20

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக்காலத்தில் வெளிநாட்டுக்கடன் அதிகரித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 82 பில்லியன் டொலராக ☞15

ஆனைக்கோட்டையில்

## அகழ்வாராய்ச்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஆனைக்கோட்டையில் அகழ்வாராய்ச்சி இன்றைய தினம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப் படவுள்ளதாக யாழ்ப்பாண ☞15

இந்திய வெளிவிவகார அமைச்சர்

## ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கு வருகை

கொழும்பு, ஜூன் 20

இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பயணத்தின்போது, இலங்கையில் இந்திய முதலீடுகள் மூலம் மேற்கொள்ளப் ☞15



அரச ஊழியர்களுக்கான

## சம்பளத்தை அதிகரிக்க கைவசம் நிதி இல்லை!

யாழ்ப்பாணம், ஜூன் 20

அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்க இந்த வருடத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாதெனவும், இதற்குப் போதுமான நிதி கையிருப்பில் இல்லை எனவும் நிதி அமைச்சு தெரிவித் ☞15

ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி

## யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு நீதி கோரியும், அச்சுவேலியில் ஊடகவியலாளர் த. பிரதீபனின் வீடுமீது தாக்குதல் நடத்தி, உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டமையைக் கண்டித்தும் ☞15

## மனைவியை எரித்துக்கொன்ற கணவனுக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜூன் 20

மனைவியை எரித்துக் கொன்ற கணவனுக்கு 9 வருடங்களின் பின்னர், விசாரணைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி மானிப்பாய் காக்கைதீவில் உள்ள வீடொன்றில் மனைவியின் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக்கொன்ற குற்றச்சாட்டில், அவருடைய கணவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

2019 ஆம் ஆண்டு முதல் மேல் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்றுவந்த நிலையில், இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று ☞15

## யாழ். விவசாயிகளுக்கு வாயுத் துப்பாக்கி

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். விவசாயிகளுக்கு எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் வாயுத் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரி[illegible]ள் ☞15

வவுனியாவில் நேற்றுமுன்தினம்

## 2.3 ரிக்டரில் நிலநடுக்கம்!

உறுதிப்படுத்தியது புவிச்சரிதவியல் பிரிவு

விரிவு :- பக். 15



## அதிகாரப் பகிர்வை வழங்கினால் பொருளாதார வளர்ச்சி சாத்தியம்

### நாடாளுமன்றத்தில் சித்தார்த்தன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 20

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வை வழங்கினால் மாத்திரமே பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும். இதன் ஓர் அங்கமாக மாகாணசபை முறைமையை மீளச் செயற்படுத்தி மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துங்கள் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மாகாணசபை முறைமையை தொடர்வதற்கு ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ள மூன்று தலைவர்களும் இணங்கியுள்ளனர். மாகாணசபை முறைமைதான் இறுதித்தீர்வு அல்ல. குறைந்தபட்சம் அரசமைப்பில் உள்ளவற்றையாவது செயற்படுத்தினால்தான் அடுத்தகட்டம் ☞15


## உழவியந்திரத்தோடு மோதி சிறுவன் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 20

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்துடன், மோட்டார்சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் சிறுவன் உயிரிழந்துள்ளான். ☞15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் மீண்டும் பெரும் நெருக்கடி எழும்



## மைத்திரிபால எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 20

**தற்போதைய தவறான பொருளாதாரக் கொள்கையால் அடுத்து யார் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தாலும் குறுகிய காலப்பகுதிக்குள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.**

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் விளைவை அடுத்த தேர்தலின் பின்னர் நாட்டு மக்கள் உணரமுடியும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும் அளவுக்கு நான் பைத்தியக்காரன் அல்லன். ரணிலிடம் இருப்பது லிபரல் கொள்கை. என்னிடம் இருப்பது சுதேச கொள்கை.

வெளிநாட்டுக் கடன்களை செலுத்த ஆரம்பித்த பிறகு தான் நாட்டுக்கு என்ன நடந்துள்ளது என்பது தெரியவரும். அடுத்து யார் ஜனாதிபதியானாலும் குறுகிய காலப்பகுதிக்குள் பெரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக்கட்சி போட்டியிடும். நீதிமன்றத் தீர்ப்பு கிடைப்பதில் தாமதம் ஏற்படின் மாற்று சின்னத்திலேயே களமிறங்க வேண்டிவரும் - என்றார். (எ-44)

# எல்லைதாண்டிய மீன்பிடி; தமிழக மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 4 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் ரோலர் படகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீன வர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-125-20)

# விபத்தில் சிக்கிய இளைஞன் மரணம்



முல்லைத்தீவு, ஜூன் 20

முத்துஜயன்கட்டில் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த 10ஆம் திகதி நடந்துள்ளது. வவுனியாவைச் சேர்ந்த, முள்ளியவளையில் வசித்துவந்த சி. அரவிந்தன் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். கூலி வேலை செய்யும் இவர் வீதியில் சென்றுகொண்டிருந்தபோது, 17 வயதுச் சிறுவன் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளது. அதில் படுகாயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய சிறுவன் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்த நிலையில், தற்போது ஒட்டுசுட்டான் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-19)



# பெறுபேற்றில் சாதனை மாணவி கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

சமூகப் பொருளாதார ரீதியில் பின்நோக்கியுள்ள யாழ்ப்பாணத்தின் நாவாந்துறையில் உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்திபெற்று உயிரியல் துறைக்குத் தெரிவான மாணவி ராஜமோகன் அகிம்ஷாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

வெண்கரம் குழுமத்தின் 'கல்விக்கு கரம் கொடுப்போம்' செயற்றிட்டத்துடன் நாவாந்துறை அண்ணா சனசமூக நிலையமும் இணைந்து இந்த நிகழ்வை முன்னெடுத்தன.

மாணவியினுடைய எதிர்கால கற்றல் செயற்பாடுகளுக்கான செலவுப் பொறுப்பை, யாழ்ப்பாணம் இணுவிலைச் சேர்ந்த அமெரிக்கா வாழ் புலம்பெயர் சமூக நேசர் செல்லத்துரை சண்முகபாஸ்கரன் ஏற்றுக்கொண்டார். நிகழ்வில் மாணவர்கள், கல்விச் சமூகத்தினர், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பிரதேச மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-100)




# தேசிய பளுதூக்குதல் நடேஸ்வரா முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட பளுதூக்குதல் போட்டியில் யாழ்ப்பாணம் நடேஸ்வரா கல்லூரி மாணவன் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளான்.

இலங்கை பாடசாலைகள் பளுதூக்குதல் சங்கம் நடத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்குதல் போட்டியானது கண்டியிலுள்ள பிலிமதலாவ மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வாரம் நடைபெற்றது.

அதில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 67 கிலோ எடைப்பிரிவில் பங்குபற்றிய நடேஸ்வரா கல்லூரி மாணவன் எல்.லயஜினதன் 162 கிலோ எடையைத் தூக்கி முதலிடம் பிடித்துள்ளார். (ச-100)

# தேங்காய்எண்ணெய் விலைக்கு கட்டுப்பாடு



கொழும்பு, ஜூன் 20

சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலையை கட்டுப்படுத்த புதிய ஒழுங்குமுறை வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் ரோஷன் பெரேரா தெரிவித்துள்ளார்.

சந்தையில் தேங்காய்எண்ணெயின் விலை அதிகரிப்பதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை. இறக்குமதி செய்யப்படும் தேங்காய்எண்ணெய்க்கு வரி அதிகரிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு மே மாதம் வரை 42,000 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது, இது கடந்த ஆண்டைவிட இரு மடங்கு அதிகமாகும்.

நாட்டில் நுகர்வுக்குப் போதுமான தேங்காய்எண்ணெய் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# மதச்சுதந்திரத்துக்குத் தடை ஏற்படக்கூடாது

## மன்னார் மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

மன்னார், ஜூன் 20

மன்னாரில் பல்லின மற்றும் பல சமய மக்கள் வாழ்கின்றனர். எம் மத்தியில் ஒற்றுமை தொடர்ந்து நிலைநாட்டப்படவேண்டும்.

-இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தெரிவித்தார். ஐக்கிய அபிவிருத்தி நிதியமும் கிராமிய முகாமைத்துவ நிறுவனங்களின் சம்மேளனமும் இணைந்து, 'மன்னாரில் மனித வாழ்வில் சமய சுதந்திரம்' என்ற தொனிப்பொருளில் கடந்த சனிக்கிழமை நடத்திய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டம் பல்லின பல சமய மக்கள் வாழும் ஒரு மாவட்டமாக இருப்பதால் யாவரும் தங்கள் மதச் சுதந்திரத்தைப் [illegible] இடம் கொடுக்கவேண்டும். இங்குள்ள ஒவ்வொருவரும் மதங்களைப் பற்றி விமர்சிப்பது கிடையாது. கடந்த காலத்தில் சமயத் தலைவர்களும் இவ்வாறே செயற்பட்டனர். யாவரும் வேறுபட்ட முறையில் இறைவனை நாடினாலும் எல்லோரும் ஒரே கடவுளைத்தான் நாடுகின்றனர். இங்கு பல மதங்கள் இருந்தபோதும் ஒற்றுமையாக இருந்து தங்கள் ஒற்றுமை நிலைநிறுத்த வேண்டும் - என்றார். (ப-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரியைச் சரியாக அறவிட்டால் புதியவரிகள் அவசியமற்றவை



## சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 20

**வரி அறவிடும் முறையை சீராக மேற்கொண்டால் புதிய வரிக் கொள்கைகளை அறிமுகப்படுத்தத் தேவை ஏற்படாது.**

**-இவ்வாறு நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த புதிய வரி அதிகரிப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரச வருமானத்தை அதிகரித்து ஓர் இலக்குக்கு கொண்டுவர வரி அதிகரிப்பு பிரேரணைகள் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் கடந்த வருடம் மாத்திரம் ஒரு கோடிக்கும் அதிக வரி செலுத்த வேண்டிய முன்னணி வியாபாரிகள் ஒரு இலட்சம் பேருக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வரிச் சலுகை வழங்காமல் இருந்தால் புதிய வரி அறிமுகப்படுத்தத் தேவையில்லை.

புதிய வரி மூலம் அரசாங்கம் 60ஆயிரம் கோடி இலாபத்தை எதிர்பார்க்கிறது. ஆனால் ஒரு இலட்சத்து 20ஆயிரம் கோடி ரூபா வரி செலுத்துவது தவிர்க்கப்பட்டிருக்கிறது.

வரி செலுத்துவதை தவிர்த்து வருபவர்களை வரி கொள்கைக்குள் உள்வாங்கிக்கொள்ள நடவடிக்கை எடுப்பதன் மூலம் அரசாங்கத்துக்கு தேவையான வருமானத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். அதை ஏன் அரசாங்கத்தினால் செய்ய முடியாது? - என்றார். (ச-இ)

# மருத்துவத்துக்காக கஞ்சாச் செய்கை!

## திட்டவரைவு சமர்ப்பிக்கலாம்

ஏற்றுமதி செய்யும் நோக்குடன் மருத்துவ தேவைகளுக்காக கஞ்சா பயிரிடுவதற்கான திட்ட வரைவுகளை சமர்ப்பிக்கலாம் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

திட்ட வரைவுகளை சமர்ப்பிக்க விரும்புவோர் மீளளிக்கப்படாத விண்ணப்ப கட்டணமாக 400 டொலரும் மதிப்பீட்டு கட்டணமாக 1250 டொலரும் செலுத்தவேண்டும்.

உள்நாட்டு - வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திட்ட வரைவுகளை சமர்ப்பிக்கலாம். ஆக்கக்குறைந்த முதலீட்டுத் தொகை 5 இலட்சம் டொலர். பாதுகாப்பு பிணைப்பணமாக இரண்டு மில்லியன் வைப்புச்செய்யப்படவேண்டும். அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் கட்டணம் ஒரு இலட்சம் டொலர் பின்னர் 200 டொலர்.

முதலீட்டுச்சபை அனுமதி வழங்கிய பின்னர் ஆயுள்வேத திணைக்களமும், விவசாயத் திணைக்களமும் பயிரிடல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)

# ஆயுள்வேத பட்டதாரிகள் பயிற்சிகள் மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக தடைப்பட்டிருந்த ஆயுள்வேத பட்டதாரிகளின் பயிற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

அதன்படி, மாதாந்தம் 67,500 ரூபா கொடுப்பனவுடன் ஆயுள்வேத பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் 320 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது. என்றும் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மேலும் தெரிவித்தார். (ச-இ)

# ஜூலை மாத நடுப்பகுதியில் பெரமுன வேட்பாளர் அறிவிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஜூலை நடுப்பகுதியிலேயே பெயரிடப்படுவார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் மூன்று பிரதான வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மற்றும் அரச தரப்பு வேட்பாளர் ஆகியோரே அம்மூவர். அரச தரப்பில் இரு வேட்பாளர்கள் களமிறங்கமாட்டார்கள் என்பதுதான் எமது நிலைப்பாடு இந்த மும்முனைப்போட்டியில் எமது தரப்பே வெல்லும் என்பது உறுதி. ஜூலை நடுப்பகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் - என்றார். (எ-44)

# எம்.பி.க்களின் மீது நம்பிக்கை இல்லை


## உவிந்து விஜேவீர தெரிவிப்பு

225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் மீதும் மக்களுக்கு நம்பிக்கை இல்லையென மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் ரோகண விஜேவீரவின் மகன் உவிந்து விஜேவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ள உவிந்து விஜேவீர தற்போது உள்ள ஊழல்வாதிகள் 225 பேரும் பதவிக்கு வந்தால் நாடு அதலபாதாளத்தினுள் தள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (எ-6)

# வரிச்சுமையால் வதைபடும் மக்கள்

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 20

10 இலட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைக்கு மத்தியிலேயே இப்போது புதிதாக மேலும் வரி அறவிடத் தீர்மானித்துள்ளது அரசாங்கம்.

தவறான கொள்கைகளால் நாட்டை வீழ்ச்சியடையச் செய்துவிட்டு அரசாங்க வருமானத்தை ஈட்டுவதற்காக மக்களின் வயிற்றில் அடிப்பது தவறாகும். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அரசவருமானத்தை அதிகரிப்பதற்காகவே வாடகை வருமான வரி அறிவிடப்படுவதாக ஜனாதிபதி கூறுகின்றார். 10 இலட்சம் வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மக்கள் மீது வரிச் சுமைகளை அதிகரிப்பதன் மூலம் மேலும் நெருக்கடி நிலையே ஏற்படும். பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளாது மக்கள் மீது மேலும் வரிகளை சுமத்துவது ஏற்கமுடியாது - என்றார். (ச-இ)

# புதினம் தெரியுமோ?

ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது எண்டது எங்கட சட்டம் போடுற கொம்பு முளைச்ச ஆக்களுக்கு எப்பதான் விளங்கப்போகுதோ தெரியேலை. கனவேதும் கண்டிட்டு உடனேயே அதை ரூல்ஸாக்கினால் என்னென்ன கஷ்டமெல்லாம் வருமெண்டு உவையள் கோத்தா பயவைப் பார்த்துக்கூடத் திருந்தேலைப் போல. அந்தாள் கண்ணைமூடிக்கொண்டுபோட்ட சட்ட திட்டங்களாலதான் நாடு பாதாளத்துக்க போனது. அதோட ஆளும்பதவியில இருந்து ஓடவேண்டியதாப் போட்டுது. அதுக்குப் பிறகும் ஒரு பிரியோசனமும் இல்லாத, தேவையில்லாத பிரச்சினையளைக் கொண்டுவாற சட்டங்களையும், ரூல்ஸீகளையும் போடுறவையை என்னெண்டு சொல்றது?

இந்த வருசம் மே மாதம் ஓ. எல். எக்ஸாம் எடுத்த பிள்ளையள் எல்லாரும் ஜூன் மாதத்தில இருந்து ஏ.எல். படிக்க பள்ளிக்கூடம் கட்டாயம் போகோனுமெண்டு அரசாங்கம் ஓர்டர் போட்டுது. ஜூன் மாதத்தில இருந்து ஏ.எல்.வகுப்புக்குரிய வரவு கணிக்கப்படும் எண்டும், அதை வைச்சுத்தான் எக்ஸாம் எழுதவிடுவம் எண்டும் அறிவிக்க இப்ப ஓ.எல். எடுத்த எல்லாப்பிள்ளையளும் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிட்டினம். ஆனால் அவையை எந்தப் பிரிவுக்கு விடுறது எண்டு பள்ளிக்கூடக்காரருக்கு கடும் சிக்கலாப் போட்டுது. வழக்கமா ஓ.எல். எக்ஸாம் எழுதின பிள்ளையள் ரிசல்ட் வருமட்டும், மூண்டு நாலு மாதத்துக்கு நிம்மதியா வீட்ட நிண்டு விளையாடுறது. ரூர் போறது எண்டு எக்ஸாம் ரென்சனைக் குறைப்பினம். ஏ. எல்.லுக்கு என்ன பாடத்தை எடுத்தா நல்லது? எண்டு தங்களுக்கு தெரிஞ்ச ஆக்களிட்ட அட்வைஸ் கேப்பினம். சில பள்ளிக்கூடங்களில ஏ.எல்.லுக்கு வகுப்புத் தொடங்கினாலும் ரிசல்ட் வரமுதல் வரவு கட்டாயம் எண்டு முந்திச் சொல்லுப்படேலை. அதால கூடுதலான பிள்ளையள் ரிசல்ட் வந்த பிறகுதான் பள்ளிக்கூடத்துக்குப் போவினம்.

ஆனால் இப்ப கண்டறியாத புது ரூல்ஸ் ஒண்டைக் கொண்டந்ததால, இந்தப் பிள்ளையளுக்கு என்னத்தைப் படிப்பிக்கிறது, என்ன பிரிவுக்கு விடுறது எண்டே விளங்காமல் பள்ளிக்கூடக்காரர் முழுசுகினமாம். சில பள்ளிக்கூடங்களில இங்கிலிஷ் வகுப்பு, கொம்பியூட்டர் கிளாஸ் எண்டு பொதுவா ஏதோ படிப்பிச்சு நேரத்தைக் கடத்துகினம். இப்பிடி வாற பிள்ளையள சும்மா வைச்சிருந்தால், கடும் கூத்துக் காட்டிப்போடுவினம். அதால அவையை 'மேய்க்கிறதே' பெரும்பாடாக் கிடக்கெண்டு பள்ளிக்கூடக்காரர் அழுவாரப் போல சொல்லுகினம். அதோட இப்ப வாற பிள்ளையள் இங்கிலிஷ் வகுப்பில படிக்கேக்கையே 'சேர், எனக்கு ரிசல்ட் பத்தாட்டியும் ஏ.எல். படிக்க விடுவீங்கள் தானே?' எண்டு கேக்குதுகளாம். இப்பிடி ஏ.எல். படிக்கிற ஆசையைக் காட்டிப் போட்டு, பிறகு ரிசல்ட் பத்தாட்டி என்னெண்டு அந்தப் பிள்ளையளை பள்ளிக்கூடம் வரவேண்டாம் எண்டு சொல்லுறது? அதே பிரச்சினைதான், அவையளுக்கு ஏத்த பாடப் பிரிவுகளை செலக்ட் பண்றதிலையும் இப்ப இருக்குதாம். பேசாமல் பிள்ளையளை ரிசல்ட் வந்த பிறகு ஏ.எல்.வகுப்புக்கு வந்தாக் காணும், விரும்பின பிள்ளையள் மட்டும் இப்ப வரலாமெண்ட ரூல்ஸையே நடைமுறைப்படுத்தியிருந்தா இந்தச் சில்லெடுப்பெல்லாம் வந்திருக்காதெல்லோ. சட்டங்கள் போட்டால் மட்டும் பத்தாது. அதால என்னென்ன விளைவுகள் வருமெண்டும் அறிஞ்சுதான் அதுகளைப் போட வேணும் கண்டியளோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். மூத்த சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.





**மிதுனம்:** திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்புண்டு. பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும்.





**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். பிள்ளைகளுக்காகச் செலவு செய்யவேண்டியிருக்கும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. தந்தை வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.





**துலாம்:** காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகளில் திட்டமிடுதல் அவசியம். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். அம்பிகையை வழிபடுவதன் மூலம் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல தகவல் கிடைக்கும். செலவு செய்வீர்கள். வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.





**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். அனுசரித்துச் செல்லவும். பிணக்குகள் நீங்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். காரியம் முடிவது இழுபறியாகும். பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. நல்ல திருப்பம் ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.





**கும்பம்:** சிலருக்குக் குடும்ப விடயமாக சற்று அலைச்சலும்செலவுகளும்ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மறைமுகத் தொல்லைகள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும். அலைச்சல் உண்டாகும்.



# நவிண்டில் மழலைகளின் காத்தவராயன் கூத்து



யாழ்ப்பாணம், ஜூன் 20

நவிண்டில் கப்பியத் தோட்ட பெரியஞ்சீமா ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மழலைகளின் 'மலைக்கு வாதாடிய மைந்தன்' எனும் காத்தவராயன் கூத்து அண்மையில் நவிண்டில் ஞானவைரவர் ஆலய முன்றலில் இடம்பெற்றது. (ச)



# சமுர்த்திப் பயனாளருக்கு சாவகச்சேரியில் வீடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினரால் இந்த வருடம் தென்மராட்சிப் பிரதேசத்தில் நிரந்தர வீடு இல்லாத சமுர்த்திப் பயனாளிகள் இருவருக்கு தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளை அமைக்க அனுமதி வழங்கியுள்ளனர்.

கொடிகாமம் வங்கிப் பிரிவிலும் சாவகச்சேரி சமுர்த்தி வங்கியின் நுணாவில் பிரிவிலும் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இந்த வீடுகளுக்கு சமுர்த்தி முகாமையாளர்கள் நேற்று புதன்கிழமை அடிக்கல் நட்டு பணிகளை ஆரம்பித்து வைத்தனர். (ச-9)



# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 20

சிவஸ்ரீ பால.திருகுணானந்தக்குருக்களின் வழிநடத்தலில், வாராந்தப் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், செல்லப்பா சுவாமிகள் குருபூசை விழாவும் பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சிவநெறிப் பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்ளவுள்ளார். 'தேரடிச் சித்தர் மகிமை' எனும் விடயப்பொருளில் பிரசங்கச்சுடர் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனின் சொற்பொழிவும், தொடர்ந்து பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன. (எ-25)

# நூல், சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம். ஜூன் 20

கல்வியியற் கல்லூரி ஓய்வுநிலை விரிவுரையாளரும், அரசியல் சமூக செயற்பாட்டாளருமான கலாநிதி ந. இரவீந்திரனின் 'ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம்' எனும் நூலினதும், 'ஜீவநதி' சஞ்சிகையின் ந. இரவீந்திரன் சிறப்பிதழினதும் அறிமுக நிகழ்வு, சுழிபுரம் கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக கேட்போர் கூடத்தில் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் நிகழ்ச்சித் தொகுப்பைப் புதுக்குடியிருப்புப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் சபா. தனுஜன் வழங்குவார். நூலுக்கான கருத்துரைகளை வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா. குகதாஸும் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கமும் ஆற்றுவர்.

சிறப்பிதழ் தொடர்பான கருத்துரைகளை வலி.மேற்குப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் ச.ஜெயந்தனும், பிரபல பட்டிமன்ற நடுவரும், அளவெட்டி அருணோதயக் கல்லூரி ஆசிரியருமான த.ஸ்ரீபிரகாஸும், நூலக செயற்பாட்டாளர் ஜெ.தஸ்மினியும் ஆற்றுவர். ஏற்புரையையும், நன்றியுரையையும் கலாநிதி ந. இரவீந்திரன் ஆற்றுவார். ஆர்வலர்கள் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (எ-25)

# டெங்கு பரவும் சூழல்; இருவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

டெங்கு நுளம்பு பரவும் வகையில் சூழலைப் பேணிய இருவருக்குத் தலா 3 ஆயிரம்ரூபாதண்டம்விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி, பண்டத்தரிப்பின் சில பகுதிகளில் அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு தொடர்பிலான மீள் தரிசிப்பின் போது, டெங்கு குடம்பிகள் கண்டறியப்பட்ட இடங்கள் தொடர்பிலே உரிமையாளர்கள் இருவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் கடந்த வியாழக்கிழமை குறித்த வழக்கு, விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது இரு வீட்டு உரிமையாளர்களும் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து தண்டம் அறவிடப்பட்டது. (ப-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# என்ன சொல்லப்போகின்றார்கள்?

இந்தியாவில் மூன்றாவது முறையாகவும் ஆட்சிபீடமேறிய மோடி தலைமையிலான அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். புதிய அரசாங்கம் பதவியேற்ற சூட்டுடன் இலங்கைக்கான அவரது பயணம் அமைந்திருக்கின்றது. அதுவும் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கி வரும் சூழலில் அவரது பயணம் நடைபெறுகின்றது. அவரது இந்தப் பயணத்தின்போது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை கொழும்பில் இன்று சந்திக்கவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இன்றைய இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவுக்கு எதையாவது சொல்லப்போகின்றார்களா? அல்லது ஜெய்சங்கர் சொல்வதைக்கேட்டுவிட்டு வரப்போகின்றார்களா? என்பதே இப்போதுள்ள பிரதான கேள்வி. தமிழ்த் தலைவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு எதைச் சொல்லப்போகின்றனர்? அடுத்து இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், மீண்டும் புளித்துப்போன 13 ஆவது திருத்தம் தொடர்பில்தான் தமிழ்த் தலைவர்களுடன் பேசப்போகின்றாரா? என்பது அடுத்த கேள்வி.


ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தரப்பில் ஒருங்கிணைந்த நிலைப்பாடு இல்லை. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலை வர் இரா.சம்பந்தன், சிங்கள வேட்பாளர்களை ஆதரிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துகிறார். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளான ரெலோ, புளொட் என்பன தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கின்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் புறக்கணிப்பு நிலைப்பாட்டில் இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழலில் இன்றைய கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இந்தியா எத்தகைய நிலைப்பாட்டிலிருக்கின்றது என்பதும், தமிழ்க் கட்சிகளிடத்திலிருந்து எத்தகைய நிலைப்பாடு எடுக்கப்படவேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது என்பதும் வெளிப்படுத்தப்படக்கூடும்.

இந்தியா தனது பிராந்திய நலன் சார்ந்து மாத்திரம் ஜனாதிபதித் தேர்தல் விடயங்களை அணுகமுற்பட்டால், தமிழ்த் தலைவர்கள் அதற்கு என்ன பதிலைச் சொல்லப்போகின்றனர் என்ற தெளிவு அவர்களிடத்தில் இல்லை. ஏனெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரை ஒன்றிணைக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே. இப்படியான சூழலில் இந்தியா தமிழ்க் கட்சிகளை எத்தகைய முடிவுகளை நோக்கித் தள்ளப்போகின்றது என்பது முக்கியமானது.

தமிழ்க் கட்சித் தலைவர்கள், இந்திய வெளிவகார அமைச்சரை இன்று சந்திப்பதற்கு முன்னர் தங்களுக்குள் ஆகக்குறைந்தது கூடிக்கதைக்கக் கூட முயலவில்லை. இன்றைய கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் விடயங்களை முன்வைக்கும் போது தமிழ்க் கட்சித் தலைவர்கள் நவக்கிரகங்களைப் போல ஒவ்வொரு திசையில் இருந்து பதிலளிக்கப் போகின்றனர். இது இந்தியாவுக்கு இலகுவானது. முதலில் நீங்கள் ஒரு நிலைப்பாட்டை எடுங்கள். அதன் பின்னர் நாங்கள் செய்வது பற்றிப்பேசலாம் என்று தட்டிக்கழிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கப்போகின்றது.

தமிழ் மக்களின் அடிப்படை வேணவாக்களை விட்டுக்கொடுக்காத வகையில், இந்தியாவின் சொல் கேட்டு அதன் பின்னால் செல்லாமல், எங்களுக்குத் தேவையானது என்ன என்பதையும், அதை இந்தியா எப்படிச் செய்யமுடியும் என்பதையும் முதுகெலும்புடன் தமிழ்த் தலைவர்கள் இன்றைய சந்திப்பில் முன்வைத்தால் அதுவே சிறப்பானதாக இருக்கும்.







# 58 ஆயிரத்து 304 பேருக்கு இரட்டைக் குடியுரிமை!

## அமைச்சர் டிரான் அலஸ் தகவல்

**கொழும்பு, ஜுன் 20**

**2015 மற்றும் 2020 ஆண்டுக்கிடையில் இலங்கையில் 58 ஆயிரத்து 304 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.**

**நாடாளுமன்றத்தில் காலி மாவட்ட சபை உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய கேள்விக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதனைத் தெரிவித்தார்.**

இரட்டைக் குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 63,917ஆக அதிகரித்துள்ளது. 2015ஆம் ஆண்டில், இதற்காக விண்ணப் பித்தவர்களின் எண்ணிக்கை 17,126 ஆகவும், குடியுரிமை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16,184 ஆகவும் உள்ளது.
2016ஆம் ஆண்டில் இரட்டைக் குடியுரிமைக்காக 14,802 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவர்களில் 13,933 பேருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.
2017இல் 9,549 விண்ணப்பங்களும், 2018இல் 9,750 விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்படி, 2017 இல் 8,881 மற்றும் 2018 இல் 8,747 விண்ணப்பங்கள் வழங்கப்பட்டன.
2019 ஆம் ஆண்டில், விண்ணப்பங்களின் எண்ணிக்கை 8,702 ஆகவும், வழங்கப்பட்ட எண்ணிக்கை 7,405 ஆகவும் உள்ளது.
மேலும் 2020 ஆம் ஆண்டில், 3,988 விண்ணப்பதாரர்கள் மற்றும் 3,154 பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டன என்று அவர் அறிக்கையூடாக வெளிப்படுத்தினார். (ச-இ)

# 182 இந்திய மீனவர்கள் இவ்வருடத்தில் கைது

கொழும்பு, ஜுன் 20
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 182 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களிடமிருந்து 24 மீன்பிடி படகுகளும் கைப்பற்றப்பட்டன.
இதேவேளை, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் மீன் பிடி படகுடன் கைதுசெய்யப்பட்டனர் என்றும் இலங்கை கடற்படையினர் குறிப்பிட்டனர். (ச-இ)

# முத்திரையின் விலையை அதிகரிக்க தீர்மானம்

தபால் முத்திரை ஒன்றின் விலையை 100 ரூபாவாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது என்று வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார். திறைசேரியின் அனுமதி கிடைத்தவுடன் விலை அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டு வரை 15 ரூபாவா இருந்த முத்திரையின் விலை தற்போது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அஞ்சல் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டம் அடைந்து வருவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# பாதாளக்குழு 8 பேர் கைது

கொழும்பு, ஜுன் 20
பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 விசேட குழுக்களால் நாடளாவிய ரீதியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் பாதாளஉலககும்பலைச்சேர்ந்த மேலும் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# கடன் மறுசீரமைப்பு இலங்கை – சீனா பேச்சு

கொழும்பு, ஜுன் 20
கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக இலங்கையும், சீனாவும் பீஜிங்கில் நடைபெற்ற இராஜதந்திர ஆலோசனை சந்திப்பொன்றில் கலந்துரையாடியுள்ளன.
இரு நாடுகளுக்கு இடையிலான 13ஆவது சுற்று தூதரக ஆலோசனைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## நாளை

21.06.2024
**வெள்ளிக்கிழமை**
**ஆனி - 07**
சுபநேரம் : 05.54 - 07.24
ராகுகாலம் : 10.24 - 11.54
பூரணை விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**நம்பிக்கை என்பது கண் விழித்திருக்கும் போதே காண்கிற கனவு.**

**- பிளினி-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி நடுக்க வாய்ப்புகள் இலங்கையில் அதிகம்!

## மூத்தவிரிவுரையாளர் பிரதீபராஜா தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 20**

**இலங்கையில் அண்மையில் அதிகமாக நிகழும் புவி நடுக்க அதிர்வுகள் இலங்கையின் கீழான கவசத்தகடுகளில் சிறிய அளவிலான மாற்றங்கள் ( விலகல், ஒருங்கல் , அமிழ்தல்) ஏற்படுவதை வெளிப்படுத்தியுள்ளன. இந்த மாற்றங்கள் பெரிதாக அமையும் சந்தர்ப்பத்தில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய புவி நடுக்கங்கள் இலங்கையில் தோன்றலாம்.**


-இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளரும் வானியல் ஆய்வாளரும் இலங்கையின் புவியியல் தொடர்பாக பல நூல்களை எழுதியவருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு வவுனியாவில் சிறிய அளவிலான நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலும் இன்னமும் அதிகாரபூர்வமான அறிவித்தலை இலங்கை அரசாங்கம் வெளியிடவில்லை.

இலங்கையின் நிலப்பகுதிகளிலும், இலங்கையை அண்மித்த கடல் பகுதிகளிலும் கடந்த 5 ஆண்டுகளில் 29 நிலஅதிர்வுகள் அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

உலகில் முன்னெதிர்வு கூறமுடியாத மிகப்பெரும் உயிரழிவுகளை ஏற்படுத்தக்கூடிய இயற்கை அனர்த்தங்களில் புவி நடுக்கம் முதன்மையானது. சிறப்பான விழிப்புணர்வுடன் இருந்தால் ஓரளவு பாதிப்புகளைக் குறைக்கலாம். இலங்கையின் அனைத்துப் பகுதிகளும் மிகப் பெரிய புவிநடுக்கத்துக்கான வாய்ப்பைக் கொண்டுள்ளன - என்றார். (ச-555)



# 41 மரணதண்டனை நிறைவேற்றம்

## நீதியமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 20

சிறைச்சாலை தகவல்களின்படி 1969 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை 42 பேர்மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

1959 ஆம் ஆண்டிலிருந்து 1975 ஆம் ஆண்டு வரை நாட்டில் மரணதண்டனை நடைமுறையில் இருந்து வந்தது.

ஆயினும் 1976 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

சிறைச்சாலை தகவல்களின்படி 1969 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை 42 பேர் மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# சமுர்த்தி முகாமையாளர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று புதன்கிழமை புதிய அலுவலகங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். சமுர்த்தி அலகின் தலைமைப்பீடம் மற்றும் சமுர்த்தி வங்கிகள், கருத்திட்ட முகாமையாளர்களே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ச-9)

# 'சர்வஜன அதிகாரம்' பரப்புரை 27 இல்!



கொழும்பு, ஜூன் 20

'சர்வஜன அதிகாரம்' எனும் அரசியல் கூட்டணியின் முதற்கட்ட தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி மக்கள் மயப்படுத்தப்படும் என்று கூட்டணியின் பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது பிரதான கட்சிகளின் ஆதிக்கமில்லை. பிரதான கட்சிகள் எனக் கூறப்படும் தரப்புகளெல்லாம் பல அணிகளாகப்பிளவுபட்டுள்ளன. 30 முதல் 40 சதவீதமான வாக்காளர்கள் எந்தத் தரப்புக்கு வாக்களிப்பது என்பது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. எமது அணியில் உள்ளவர்கள் எல்லாம் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

'சர்வஜன அதிகாரம்' தேர்தல் விஞ்ஞாபனத்தை எதிர்வரும் 27 ஆம் திகதி முன்வைத்து அது தொடர்பில் மக்கள் மத்தியில் கருத்தாடல் இடம் பெறும்- என்றார். (ச-44)



# கோத்தாவின் பாவத்தின் பங்காளிதான் ரணில்

## முஜிபூர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 20


கோத்தாபய ராஜபக்ச மற்றும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் பாவத்தின் பங்காளியாக ஜனாதிபதியாகச் செயற்படுகிறார். அவர்கள் விட்ட தவறை தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் இவர் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று தாக்கத்தில் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்களை தகனம் செய்யவேண்டாம், சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய நல்லடக்கம் செய்யுங்கள் என்று அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் பலமுறை வலியுறுத்தினோம். இவ்விடயம் குறித்து ஆராய்வதற்கு தொழில்நுட்ப குழுவும், துறைசார் நிபுணர்களின் குழுவும் நியமிக்கப்பட்டன. சர்வதேச சுகாதார தாபனம் முன்வைத்துள்ள பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கமைய உடல்களை அடக்கம் செய்யலாம் என்று இந்த குழு அறிக்கை சமர்ப்பித்தது. ஆனால் கோத்தாபய ராஜபக்ச இனவாத ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கினார். இப்போது ரணில் விக்கிரமசிங்க பெரமுனவின் ஆதரவில் இருப்பதால் இவரும் பாவத்தில் பங்காளியாகியுள்ளார் - என்றார். (ச-இ)

# சட்டமா அதிபரின் பதவி நீடிப்பு அரசமைப்புப் பேரவை நிராகரிப்பு



கொழும்பு, ஜூன் 20

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான யோசனை அரசரமைப்புப் பேரவையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்புப்பேரவை நேற்று முன்தினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அரசமைப்புப் பேரவைக்கு தற்போதைய சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இதுதொடர்பில் இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு அரசமைப்புச் சபை உறுப்பினர்களுக்கு இடையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பரிந்துரைக்கு எதிராக 5 வாக்குகளும், ஆதரவாக 3 வாக்குகளும் அளிக்கப்பட்டதையடுத்து குறித்த யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை- சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணத்தின் பதவிக்காலம் இம்மாதம் நிறைவடையவுள்ள நிலையில்அவரின் பதவிக்காலத்தை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதன் மூலம் ஜனாதிபதி தனது சட்டவிரோத திட்டங்களை சட்டபூர்வமாக நிறைவேற்ற முற்படுகிறார் எனப் பல்வேறு தரப்பினரும் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுக்கோழியுடன் இருவர் கைது

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு சென்ற பேருந்தில் இறந்த காட்டுக் கோழியொன்றை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் பேருந்தின் சாரதியும் நடத்துநரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வனஇலாகா அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் பேருந்தை சோதனையிட்ட வனஇலாகா அதிகாரிகள், சாரதியின் ஆசனத்தின் கீழிருந்து காட்டுக்கோழியை மீட்டனர். இந்தக்கோழி பேருந்துடன் மோதி இறந்ததாக சாரதியும் நடத்துநரும் தெரிவித்த நிலையில் இருவரையும் ஒரு இலட்சம் ரூபா பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ச-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலைப்பந்தாட்டப் போட்டிகள் யாழ்ப்பாண கல்லூரி வெற்றி!







யாழ்ப்பாணம், ஜூன் 20

' சுகிர்தம் ஆர்னோல்ட் ' ஞாபகார்த்த வலைப்பந்து போட்டியின் இறுதி ஆட்டங்கள் அண்மையில் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியதில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி அபார வெற்றியீட்டியது.

16 வயது பிரிவில் அராலி சரஸ்வதி இந்து கல்லூரி எதிர் பொன்னாலை வரதராஜ பெருமாள் வித்தியாசாலை மோதியதில் அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. 18 வயது பிரிவில் அராலி சரஸ்வதி இந்து கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள் மோதியதில் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆதிக்கமே மேலோங்கி யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றிக் கேடயத்தை தானதாக்கியது. (ச-125)



சூழலியலாளரும், அதிபரும், எழுத்தாளரும், ஆன்மீகச் செயற்பாட்டாளருமான தி.தவரத்தினம் எழுதிய 'பிரபஞ்சத்தில் சங்கு' எனும் நூல், காரைநகர் சடையாளியில் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. (ப)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சமூக அமைப்பின் ஏற்பாட்டில், கடற்கரையோர மாகாணங்களுடைய தீவிர வானிலை நிகழ்வுகளும் தேசிய அனர்த்த முகாமைத்துவ தயார்நிலைத் திட்ட மொழிவுகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியும், திருநெல்வேலியிலுள்ள தனியார் விடுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. நிகழ்வில் வளிமண்டலவியல் திணைக்கள நிகழ்ச்சித் திட்ட அதிகாரி நிமல் பண்டார, யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் என்.சூரியராஜா மற்றும் யாழ்.மாவட்ட கரையோரப் பாதுகாப்புப் பிரிவின் அலுவலகர், பொறியியலாளர், துறைசார்ந்த அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-159-100)



ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின் செயலாளர் பத்மநாபா மற்றும் போராளிகளின் 34 ஆவது தியாகிகள் தினம், வவுனியாவில் நேற்றுப் புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது, மணிக்கூட்டுக்கோபுர சந்தியில் அமைந்துள்ள பத்மநாபாவின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ப-110)



யாழ்.மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற தம்பதியரின் கல்விப்புலம் சார்ந்த சாதனையை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்டச் செயலகத்தில் சிறப்பாக நடைபெற்றது. பட்டம் பெற்ற தம்பதியினரை யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் மற்றும் உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி ஆகியோர் பொன்னாடைகள் அணிவித்து, நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தனர். (ச-66)



கொடிகாமம், திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் போதைப் பொருள் ஒழிப்பு நடைபவனி, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு கொடிகாமம் சந்தையின் முன்னால் ஆரம்பித்து, பாடசாலையை நோக்கிய விழிப்புணர்வுப் பேரணியாக இடம்பெற்றது. (ப-159)




நல்லூர் பகுதியில் வசிக்கும் பொருண்மியம் நலிவுற்ற பத்துக் குடும்பங்களுக்கு, அமரர் சந்திரகாசன் சிவசாமியின் 31 ஆம் நாள் நினைவை முன்னிட்டு, புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் அவரது குடும்பத்தினரின் நிதியனுசரணையில், நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினரால் உலர் உணவுப் பொதிகள், மேற்படி அமைப்பின் அலுவலகத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. (ப-66)



'நீலப் பொருளாதாரம்' எனும் தொனிப்பொருளில், ஈ குருவி நிறுவனமும், புதிய வெளிச்சம் அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த நீண்டதூர விழிப்புணர்வு நடைபயணம், கடந்த திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் பருத்தித்துறை வெளிச்ச வீட்டிலிருந்து ஆரம்பமாகி மாலை 6 மணியளவில் மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தின் முன்பாக நிறைவுபெற்றது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான நிலையில் பயணிகள் நிழற்குடை



## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

**வடமராட்சி திக்கம் சந்திக்கு அருகாமையில் உள்ள பயணிகள் நிழற்குடை மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதுடன் எந்தநேரத்திலும் இடிந்துவிழும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

முற்றிலும் சிமெந்தால், மேல்தளம் கொங்றீற் தளத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள நிழற்குடையின், கொங்றீற் மேல்தளம் பலத்த வெடிப்புகளுடன் காணப்படுவதுடன், அதைத் தாங்கிநிற்கும் பகுதிகளும் சிதைவுற்றுக் காணப்படுகின்றன. மேல் தளத்தின் ஒருபகுதி ஏற்கனவே இடிந்து வீழ்ந்துள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

நிழற்குடையில் அச்சத்துடனேயே பயணிகள் பேருந்துக்காக காத்திருக்கும் நிலை காணப்படுவதால் பாதுகாப்பான பயணிகள் நிழற்குடையை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.எ-25-100)



யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 100 ஆவது சிறைச்சாலைப் பாதுகாவலர் அணியின் 9 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு. மேற்படி அணியினரின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையினரின் அனுசரணையில் மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு, யாழ்.சிறைச்சாலையில் கடந்த சனிக் கிழமை நடைபெற்றது. (ப-66)

## பெயர் மாற்றம்



பொன்னாலையில், 'வெண்கரம் படிப்பகம்' என்ற பெயருடன் இதுவரை இயங்கி வந்த இலவசப் படிப்பகம் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் 'கண்ணபிரான் படிப்பகம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் தமது சகல செயற்பாடுகளும் 'பொன்னாலை கண்ணபிரான் படிப்பகம்' எனும் பெயரிலேயே நடைபெறுமென நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-25-66)


## ஓராண்டு நிறைவாய்

**பிரபாகரன் இராஜினி**

நல்லூர் இராஜினியே!
செல்லத்துரை இராஜ
இலட்சுமியின் மகளே!
பிரான்சில் பிரபாகரனின்
பிராண நாயகியே!
கிவிசன், சுவிசனின் தாயே!
இறையடி நிழலில்
இனிதே துயில்க!



பிரிவால் துயருறும்
நல்லூர், ஊரெழு, சுண்டிக்குளி
உறவுகள்

(CS/55434) J-1



## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 10 . 03 . 1956



உதிர்வு 18 . 06 . 2024

**வைத்திலிங்கம் கைலைநாதன்**

(யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவரும், ஆளணி உப சபை உறுப்பினரும்; ஓய்வு பெற்ற மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அன்னார் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ் மாவட்ட சி.க.வ.கூ.ச.சமாசம்

(CR/42682) J-1


## INVITATION FOR BIDS (IFB)
## PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA, MULLAITIVU DISTRICT
### (Council Fund)

01. The Chairman, Local Authority Procurement Committee (LAPC) on behalf of the Puthukkudiyiruppu Pradeshiya Sabha now invites sealed bids from eligible and qualified bidders for **SUPPLY OF MOTOR BIKES** as described below.

| No | Contract No | Contract Name | Tentative Estimated Cost (Rs. Mn) | Contract Period |
|---|---|---|---|---|
| 01 | NP/14/44(04)/Cou/Bike/2024 | SUPPLY OF MOTOR BIKES | 1.30 | 45 Days |

02. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.

03. Bidders shall be a Srilankan citizen or private entity who may have a valid business Registration for the supply of above Items minimum 3 years' experience in selling

04. Interested bidders may obtain further information from **Secretary, Puthukkudiyiruppu PradeshiyaSabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** (T.P No: 0212291024, 0212290847 Fax No: 0212061640) and inspect the bidding documents at the address given below from 20th June 2024 until 03rd July 2024 Hrs on normal working days.

05. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** from 20th June 2024 until 03rd July 2024 during 09:00Hrs to 15:00Hrs on normal working days upon payment of a non-refundable fee of **Two Thousand Five hundred Rupees (Rs.2,500.00)**. The method of payment will be by cash.

06. Bids shall be delivered in duplicate to the address below at **Chairman, Local Authority Procurement Committee, Puthukkudiyiruppu PradeshiyaSabha, A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu** on or before **15.00Hrs on 04th July 2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

07. Bids shall be valid up to **18th August 2024**. All bids shall be accompanied by a Bid-Security, of Rs.19, 500.00. Bid Security shall be valid up to **15th September 2024**.

08. The Chairman reserves the right to accept or reject or partially accept any bid and to annul the bidding process and reject all bids at any time without there by incurring any liability to the bidders

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**PuthukkudiyiruppuPradeshiyaSabha,**
**A35 Road, Puthukkudiyiruppu, Mullaitivu.**
**20.06.2024**

(cr 42683) (N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம் பூசித்த நயினை நாகபூஷணித் தாய்



நயினை விசு இராசநாயகம்

**இன்று நயினை நாகபூஷணி அம்மனுக்கு தேர்**

வடஇலங்கையில் வரலாற்று மகிமையும் வழிபாட்டுச் சிறப்பையும் கொண்ட நாற்புறமும் கடலால் சூழப்பெற்ற சப்ததீவுகளில் மணிபல்லவம் எனப்படும் தனிப்பெரும் சிறப்புமிக்கது நயினாதீவு. ஆயல கடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள பதியே நயினையம்பதியாகும்.

சக்தி பீடங்கள் அறுபத்திநான்கினுள் புவனேஸ்வரிபீடம் என அழைக்கப்படும் தனிச்சிறப்பை பெற்று அன்னையவள் விளங்குகிறாள். அம்பிகையின் மூலவிக்கிரகத்தின் தோற்றமும் அதன் வரலாறும் இன்னமும் கண்டறியமுடியாத அதிசயமாகக் காணப்படுகிறது.

நயினை நாகபூசணி அம்மனின் அருளாசி தனிச்சிறப்பானது. மண்ணில் நல்லவண்ணம் வாழ நற்கருமங்களின் பொருள் பேசுவது. நம்பிக்கையுடன் வழிபாடு செய்யும் அடியார்களது நோய் நொடிகள் அனைத்தையும் நீக்கி அருள் சக்தியாகவும், குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப்பேறு அளிக்கின்ற பேரருள் சக்தியாகவும் அன்னை நாகபூசணி அருளாசி புரிகிறாள். அன்னையின் ஆலய கிழக்குவாயில் கோபுரம் நூற்றியெட்டு அடி உயரம் கொண்டது. அலைகடல் தாண்டி ஆலயத்துக்கு வரும் பக்தர்களின் பக்தியின் பரவசத்தை உவந்தளிக்கிறது. அண்மையில் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற்றது. ஆலயமும் முழுதும் வர்ணங்கள் பூசப்பட்டு புத்தெழுச்சியுடனும் பக்திபூர்வமாகவும் காணப்படுகிறது.

### நாகபூசணி எனப் பெகயர்வரக்காரணம்

நயினாதீவுக்கு அண்மித்ததாக வடக்கு பக்கமாக அனலைதீவு என்னும் ஓர் அழகியதீவுண்டு. அதன் தெற்குப்பகுதியில் புளியந்தீவு என்னும் சிறிய தீவு அமைந்துள்ளது. அங்கு வரலாற்றுடன்கூடிய நாகதம்பிரான் அலயம் உள்ளது. அந்த ஆலயப்பகுதியில் இருந்து கடல்வழியாக நாகபாம்பு பூக்களைக் கொண்டுவந்து அம்மனை வழிபாடு செய்ததாக வரலாறுகளில் கூறப்படுகிறது. அப்படி நாகம்வந்து அம்மனை பூசித்ததால் நாகபூசணி எனப் பெயர்வரக்காரணமாயிற்று.

### கருடன் கல் பாம்பு சுற்றிய கல் வரலாறு

அனலைதீவுப் பகுதியில் கடல்வழியாக நாகபாம்பு அம்மனுக்கு பூவைகொண்டு வந்த வேளை கருடன் அதை இடைமறித்ததாகவும் நாகபாம்பு அருகிலுள்ள கல்லில் சுற்றிக் கொண்டு இருந்ததாகவும் கருடன் அருகிலிருந்த மற்றைய கல்லில் அமர்ந்து கொண்டதாகவும் அவ்வேளைதனில் வியாபார நோக்கத்துக்காக படகுமூலம் கடல் வழியோ வந்த வணிகச்செட்டியரர் இந்தக் காட்சியை நேரில் கண்டு மனமுருகி அம்மனை நேக்கி வழிபாடு செய்ததாகவும் நாகம் பூக்களை பின் கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

(11 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நா.க.குமாரசூரியர்

# நாகபூஷணித்தாயே நல்லருள் புரிவாய்



ஆதிபராசக்தி மனிதர்களை தன்பால் ஈர்த்து அருள்புரிந்து காப்பதற்காக திகழ்வன சக்தி பீடங்களாகும். உலகத்தாயாகிய அன்னை பல சக்திபீடங்களில் அமர்ந்திருக்கின்றாள். காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் அமர்ந்திருக்கும் அன்னையானவள் நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தில் புவனேஸ்வரிபீடமாக அமர்ந்து அருள்பாலித்து அனைத்து உயிர்களையும் காத்து வருகின்றாள்.

ஸ்ரீநாகபூஷணி அம்மனின் வரலாற்றுச்சிறப்பும், பழைமையும் வாய்ந்த நயினையம்பதியிலே கோவில் கொண்டு எழுந்தருளி, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து திருவருள் பாலிக்கின்றாள். நாடிவரும் அடியார்களின் வினைகளையெல்லாம் தீர்ப்பவள் அன்னை. உலகுக்கு எல்லாம் இருள் கடிய உதயசூரியன் உதயமாவதைப்போல் மணி பல்லவத்தில் நாகம்மை ஆட்சி போற்றப்படுகின்றது.

தூய்மையான நாகவழிபாட்டை நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் காணலாம். நாக வழிபாட்டுக்கும் இந்தளவு புராதனமான ஆலயம் வேறு எங்கும் காணமுடியாது. மூலஸ்தானத்தில் அம்மன் உருவம்போல இருப்பது பழைய நாகப் பிரதிஷ்டையே ஆகும். இதற்குப் பின்னால் ஐந்து தலை நாகப் பிரதிஷ்டை ஒன்று உள்ளது.

நெடுங்காலமாக பிள்ளைப்பாக்கியம் இல்லாதிருப்போர் நாகபூஷணியை வழிபட்டு நாகப் பிரதிஷ்டை நாகசாந்தி செய்தால் பலன்கிடைக்கும் என்ற நம்பிக்கை அடியார்கள் மத்தியில் இன்றுமுண்டு. நாகம்பாள் அடியார்கள் ஒவ்வொருவருடைய உள்ளங்களிலும் உறுதியான இடம்பெற்று வேண்டியவரங்களை வழங்கி துன்பங்களைப் போக்கி அருளுகின்றாள்.

அம்பிகையின் இந்த வருட மஹோற்சவம் கடந்த 7ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்புடன் நடைபெற்றுவருகின்றது. இன்று வியாழக்கிழமை தேர்த் திருவிழா பல்லாயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் சிறப்பாக நடைபெறுகின்றது. சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய திருத்தேரில் அம்பாள் ஆரோகணித்து எழுந்தருளி விநாயகப் பெருமான் முருகப்பெருமான் திருத்தேர்களுடன் வீதியுலா வருவதைக் காணக் கவலைகள் எல்லாம் பறந்தோடிவிடும். இந்தக் காட்சியைச் சொற்களால் வர்ணிக்கமுடியாது. நேரில் சென்று அம்பிகையைத் தரிசித்தால்தான் அம்பிகையின் மகத்துவம் விளங்கும். இந்த நம்பிக்கையில்தான் இந்நாளில் அடியார்கள் தங்கள் பிரயாண சிரமங்களைப் பொருட்படுத்தாது திரள்திரளாக நயினையம்பதிக்குச் செல்கின்றார்கள்.

அம்பிகையின் சரித்திர வரலாறுகள் பல திருத்தேரில் செதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக போர்த்துக்கேயர் கோயிலை இடித்தமை, அப்பொழுது நயினாதீவு மக்கள் அம்பாளை மேற்கு கடற்கரையிலுள்ள ஒரு ஆலமரப்பொந்தில் ஒளித்து வைத்தமை, அம்பாளின் தேர் கடலுக்குள் உருண்டு சென்றமை, நயினாப்பட்டர் என்ற அந்தணர் அம்பிகைக்குப் பூசைசெய்தமை போன்ற பலசான்றுகள் தேரில் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சான்றுகள் அம்பிகையின் மகத்துவத்தை அடியார்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன. அம்பிகையின் திருத்தேர் விழாவில் கலந்து அருள் வெள்ளத்தில் மூழ்கி அன்னையின் அருளைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற ஆறாத பக்தியால் அடியார்கள் கவரப்பட்டு நயினையம்பதியில் சப்பரத் திருவிழாவன்றே பெருமளவில் கூடுவார்கள். அன்று இரவு முழுவதும் அம்பிகையின் சப்பரத் திருவிழாவைக் கண்டுகளித்து நல்லருளைப்பெற்று தேர்த் திருவிழாவன்று அன்னை பராசக்தியை நேரில் கண்டு அருட்காடாட்சத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அன்னையென அனுதினமும் அடியார் போற்றுகின்ற அம்பிகையைத் தரிசிக்க வருகின்ற பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு அமுதசுரபி அன்னதான சபையினர் அன்னம் வழங்குகின்றார்கள். இன்று நடைபெறும் தேர் உற்சவத்தின்போது அடியார்கள் அதிகாலை வேளையில் ஆலயத்தில் கூடிவிடுவார்கள். யாழ்.குடாநாட்டின் நாலாபக்கங்களில் இருந்தும் அடியார்கள் அலையலையாய் வரும் திருக்காட்சியைக் காண்பதற்கு கண்கள் கோடி வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகம் பூசித்த....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உற்சவ காலத்தில் பதினொராம் திருவிழா அன்று இந்தக் கற்களுக்கு விசேட பூசை வழிபாடு நடைபெறுகிறது. ஆலயத்தின் புராதன சின்னமாக இந்க் கற்கள் பாதுகாக்கப்படுகின்றன.

**அன்னையின் அருளாசி**

இவ் ஆலயம் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து கூடுகின்ற தலமாகக் காணப்படுகிறது. இவ் ஆலயத்தில் பக்தர்கள் தங்கிநின்று நாகதோஷம் நிவர்த்திக்க ஏனைய பரிகாரக்கிரிகைகள் செய்து வருகிறார்கள்.

பௌர்ணமி தினங்களில் ஸ்ரீசக்கர பூசை நடைபெறுகிறது. இதில் திருமணமாகாத பெண்கள் நல் தாலிபாக்கியம் வேண்டியும் திருமணமான பெண்கள் தாலிபாக்கியம் நிலைத்திடவும் அம்பாளை வழிபாடு செய்வார்கள்.

ஆலயத்தில் நாக சாந்தி நாக பிரதிட்சை முடியிறக்குதல் குழந்தைகளுக்கு அன்னம் ஊட்டுதல் வற்று வாங்குதல் என்பன இந்த ஆலயத்தில் சிறப்பம்சங்களாக உள்ளன. ஆலய காரியாலயத்தில் ரூபா ஐயாயிரம் மட்டும் செலுத்தினால் குடும்பத்தாரின் பிறந்தநாள் திருமணநாள் தந்தை தாய் நினைவுநாள் போன்ற தினங்களில் அவர்களது பெயரால் பூசைவழிபாடுகள் செய்து அவர்களது உள்நாட்டு வெளிநாட்டு முகவரிகளுக்கு வருடா வருடம் வீபூதி பிரசாதம் அனுப்பப்பட்டு வருகிறது. அத்துடன் அன்றையதினம் ஆலயத்தில் நித்திய அன்னதானமும் அடியவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆலய அறங்காவலர் சபையின் இந்தமுயற்சி என்றுமே பேற்றுதற்குரியது.

**ஆலயத் தொண்டு**

ஆலய பெருந்திருவழாவை முன்னிட்டு அமுதசுரபி அன்னதான சபையினர் இரவு பகல் அன்னதான சேவை வழங்கி வருகிறார்கள். ஆலய தென் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தம்பையா தாக சாந்தி நிலையம் வழமையான சேவையை வழங்கி வருகிறது.

ஆலய முன்வாயிலில் அபிவிருத்திச் சபையும் தாக சாந்தியை தொடர்ந்து வழங்கி வருகிறது. நயினாதீவு யாத்தீரிகர்கள் தொண்டர் சபை நயினாதீவு பாடசாலைகளில் சாரணர்கள் சென். ஜோன் அம்புலன்ஸ் நயினாதீவு கடல் பாதுகாப்புச் சேவையினரும் அடியவர்களுக்கு நல் சேவையை வழங்கிவருவதும் பாராட்டத்தக்கது. எல்லோருக்கும் நயினை நாகபூசணித்தாய் நல்லன எல்லாம் தந்தருளப் பிரார்த்திப்போம்.

## துயர்கள் போக்கும் தாயவள்



அலைகடல் நடுவே அமர்ந்திருக்கும் அம்மை
அனுதினம் நம்மையே காத்திடும் நாகம்மை
வரும் அடியார்க்கருளும் அவள்தானே தாய் அம்மை
வரும் துயர் அனைத்தும் தீர்க்கும் நாகபூஷணியம்மை

சிறு தினம் தன்னில் கூடத்திருவிழா காண்பாயம்மா
சிறு தொகை பக்தருடன் திருவிழா காணாதின்று
உன்கோவில் வாசலிலே பாம்பதனைக் காவல் வைத்து
உலகெங்கும் வாழும் பக்தர் தனைக்காக்க சென்றாயம்மா

கொடிய நோய் தீர்த்தருளத் தாயே நீ வாருமம்மா
கும்பிட்டுப் பாடுகிறோம் நல்லருளைத் தாருமம்மா
உயிர் நீத்த மக்களுக்கு நற்சாந்தி நீ கொடம்மா
உன்பாதம் பணிகின்றோம் நாகபூஷணித் தாயேயம்மா

வந்த துயர் அனைத்துக்கும் முன் நின்று காத்தாயம்மா
வரும் துயர் தனைப்போக்கி நல்லருளைத் தாருமம்மா
உயிர்களைக் காத்தருளும் ஆதி சக்தி நீயேயம்மா
உலகினைக் காத்தருள்வாய் நயினை நாகபூஷணித் தாயேயம்மா

கோ. இளமுருகன்

நாகபூசணி அம்மன் அருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்

பூரணி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
பாரம்பரிய கலைநயத்துடன்
தங்க ஆபரணங்களை ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளுங்கள்
46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3121

நாகபூசணி அம்மன் அருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றோம்


உதயா
ஜுவல்லர்ஸ்
✓ 22 கரட் தங்க நகைகள் அதி நவீன டிசைனுக்கேற்ப நம்பமுடியாத விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
✓ குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
79G கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Email-uthayaa Jewellerss@gmail.com
Facebook - uthayaa Jewellerss
T.P. No - 074 069 4449 / 021 222 4434

நயினை நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

செல்வி
நகை அகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
இல.205 / 1, K.K.S. வீதி,
குளப்பிட்டி யாழ்ப்பாணம்
021 222 9441

நயினை நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

சிறி மீனாட்சி
நகை அகம்
Sree Meenakchi
Nagai Aham
இல.183. கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த
எமது ஸ்தாபனம் அதற்கு அருகாமையில்
இல. 177 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் புதுப்பொலிவுடன்
இயங்குகிறது என்பதனை அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும்
அறியத்தருகின்றோம்.
இல.177 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை, கொடிகாமத்தில் பொதுவேட்பாளர் கூட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 20
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, சங்கானை மற்றும் கொடிகாமத்தில் பொதுவேட்பாளர் ஆதரவுக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.
தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏற்பாட்டில், கொடிகாமம் வர்த்தகர் சங்கத்துடன் கடந்த 14ஆம் திகதியும், சங்கானை கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினமும் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்தவேண்டியதன் அவசியம் பற்றியும் தமிழ் மக்கள் ஒன்றுசேரத் தவறும் பட்சத்தில் தமிழ்மக்களின் வாக்குகளும் பலமும் சிதறும் ஆபத்துகள் பற்றியும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. (ம-27)

# அரகலயவில் போராடியோரால் புதிய அரசியல் கட்சி உதயம்

கொழும்பு, ஜூன் 20
இலங்கை அரசியல் வரலாற்றில் பெரும் திருப்புமுனையாக கருதப்படும் அரகலய போராட்டத்தை முன்னெடுத்தவர்கள், புதிய அரசியல் இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளனர். அந்த இயக்கத்துக்கு 'மக்கள் போராட்ட முன்னணி' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
காலிமுகத்திடல் போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க அமைப்பின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளனர்.
அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளரும் மக்கள் போராட்டக்கள அமைப்பின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான வசந்த முதலிகே, மாற்றத்துக்கான இளைஞர் அமைப்பின் செயலாளர் லஹிரு வீரசேகர, மக்கள் பேரவைக்கான அமைப்பின் சட்டத்தரணி நுவான் போபகே, ஊடகவியலாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் தரிந்து உடுவரகெதர உள்ளிட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.
முன்னிலை சோஷலிசக் கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சி, சோஷலிஸ மக்கள் கூட்டமைப்பு என்பனவும் புதிய கூட்டணியில் இணைந்துள்ளன. 'இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மாற்றுவதற்கு எந்தவொரு தரப்பும் வேலைத்திட்டங்களை முன்வைக்கவில்லை. எதிர்பார்க்கப்பட்ட முறைமை மாற்றமும் நடக்கவில்லை. சர்வதேச நாணய நிதியம் காட்டும் வழியிலேயே ஆட்சியாளர்கள் பயணிக்கின்றனர். எனவே, புதிய வேலைத்திட்டத்துடன், புதிய பயணத்தை ஆரம்பிக்கவே இந்தப் புதிய அரசியல் கூட்டணி ஆரம்பமாகியுள்ளது. சமூக மாற்றமும் அவசியம். ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல்களை இலக்குவைத்து இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது' - என்று வசந்த முதலிகே தெரிவித்தார். (ம-44)

## கும்பாபிஷேக வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 20
வரலாற்றுப் பிரசித்திபெற்ற நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் எழுந்தருளியுள்ள சிவதெட்சணா மூர்த்தி ஆலய கும்பாபிஷேக தின வழிபாடுகள், இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன. விசேட சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து, அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சிவபூமி அறக்கட்டளையினர் அறிவித்துள்ளனர். (ப-66)

**சர்வானந்தமய பீடம்**
**ஸ்ரீநகரம் - அளவோடை வீதி, இணுவில்**

**புத்தகத் திருவிழா**

**எமது இல்லத்தில்**
**22.06.24 சனிக்கிழமை பி.ப. 2.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை**
**23.06.24 ஞாயிறு காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**
**சர்வானந்தமய பீட நூல் வெளியீடுகள் அனைத்தையும் தகுந்த விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.**
சம்ஸ்கிருத பத்ததி நூல்கள் பலவும், தமிழ் கிரியா விளக்க நூல்கள் பலவும் புதிதாக வெளியிடப்பட்டுள்ளன. பழைய நூல்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளன.
தமிழ் எழுத்திலும் பல பத்ததி நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.
குறைந்த பிரதிகளே உள்ளன என்பதால் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். ஒரு பிரதியாவது கிடைக்காதா என்று பின்னர் மனம் வருந்துவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
எமது சொந்தப் பாவனையிலிருந்த பழைய பெறுமதி மிக்க நூல்கள் பலவும் குறைந்த விலையிலும், இலவசமாகவும் வழங்கப்படுகின்றன.
வேத மந்திரங்கள், ஸ்தோத்திரங்கள், நாதஸ்வர தவில் மற்றும் கர்நாடக, வாத்திய இசைகள், திருமுறை மற்றும் துதிப்பாடல்கள் கற்பதற்கும், ஆலயங்களில் ஒலிபரப்பவும் உகந்தவையாக Pen Drive இல் பெற்றுக்கொள்ளலாம்.
அபூர்வமான பழைய நூல்கள் பல PDF வடிவில் Pen Drive இல் கிடைக்கும்.
அனைத்து அந்தண, சைவ, வீரசைவ சிவாச்சாரியர்களும் சிவாச்சாரிய மாணவர்களும், ஆலய பரிபாலகர்களும், ஆன்மிக அன்பர்களும், இலக்கிய ஆர்வலர்களும் அன்போடு வரவேற்கப்படுகின்றனர்.
**தொடர்பு:**
**077 3018266**
**021 224 1504**
**கோப்பாய் சிவம்**
(CS/55422) J-1

**மணிவிழா வாழ்த்துக்கள்**




**கிளி / சோறன்பற்று கனேசா வித்தியாலய முன்னாள் அதிபர்**
**இராசரத்தினம் செபரத்தினராசா**
**Trained (Hinduism), BEd, Med**
28 ஆண்டுகளாகக் கல்விப்புலத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி, 16 ஆண்டுகள் எமது பாடசாலையின் முதல்வராக இருந்து இன்று (20.06.2024) மணிவிழாக்காணும் எமது முன்னாள் **அதிபர் இ.செபரத்தினராசா** அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் உடல் உள நலனோடு மகிழ்வுற்று வாழ இறையாசி வேண்டுவதோடு மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**வாழ்த்துவோர்:**
**பாடசாலைச்சமூகம்,**
**கிளி/ சோறன்பற்று கனேசா வித்தியாலயம்.**
(cs 55429) N-1

**மாபிள் வேலை**
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்.
**077 334 1281**

**வீட்டின் இடிபாடுகள் விற்பனைக்கு**
கந்தரோடை ஸ்கந்தா பாடசாலைக்கு அருகாமையில் ஒரு பழைய வீடு முற்றாக இடித்து அப்புறப்படுத்தப் படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**077 417 9120, 076 358 2126, 076 225 4729**
**Whats app:- 0091 915 954 0807**
(CS/55418) J-1

**பெயர் மாற்றம்**
கோண்டாவில் வடக்கு கோண்டாவிலில் வசிக்கும் **தங்கவடிவேலு நவசிவன்** ஆகிய நான் எனது பெயரை **தங்கவடிவேலு நவஜீவன்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தங்கவடிவேலு நவஜீவன்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.
**தங்கவடிவேலு நவஜீவன்**
(CS/55432) J-1

**உடனடி வேலைவாய்ப்பு**
1) **Office assistant** (Female) Age below - 30
**Computer, English, Hotel Management**
படித்திருந்தால் விரும்பத்தக்கது.
2) **House Keeping and maintenance**
**Male / Female.** Age below - 30
**House Keeping course**
படித்துமுடித்து அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
பயிற்சி வழங்கப்படும்.
**Contact: 076 366 9993**
**Hotel Resort**
**No. 1001, Point Pedro Road, Kankesanthurai, Jaffna.**
(cs:55431) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹஜ் யாத்திரையில் 550 பேர் உயிரிழப்பு

டுபாய், ஜுன் 20

இந்த ஆண்டு ஹஜ் யாத்திரையின்போது 550 யாத்திரிகர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சவூதி அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடும் வெப்பம் மற்றும் நெரிசல் காரணமாக இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த 550 பேரில் 323 பேர் எகிப்தியர்கள் என்றும், அவர்களில் பெரும்பாலோர் கடுமையான நீரிழப்புக்கு ஆளாகியுள்ளனர் என்றும் சவூதி அரசு தெரிவித்துள்ளது.

வெப்பமான காலநிலையில் புனித யாத்திரை மேற்கொண்டிருந்த யாத்திரிகர்கள் பலர் நெரிசலில் சிக்கி மயக்கமடைந்துள்ளனர் என்றும் சவூதி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, இந்த வாரம் வெப்பநிலை 46 டிகிரி செல்சியஸைத் தாண்டும் என்று சவுதி தேசிய வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் அய்மன் குலாம் கடந்த வாரம் எச்சரித்துள்ளார். (எ-இ)

# ‘13’ கிடைக்குமென்று தமிழர்கள் நம்பவில்லை!

## சுதர்ஷன தெனிபிடிய எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 20

வடக்கு - கிழக்கு மக்களுக்கு சுதந்திரத்தையும் அபிவிருத்தியையும் பெற்றுக்கொடுத்தவர் மஹிந்த ராஜபக்சவே என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான மேஜர் சுதர்ஷன தெனிபிடிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல் படுத்தப்படும் என்ற தென்னிலங்கை கட்சிகளின் உறுதிமொழிகளை மீண்டும் நம்புவதற்கு வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தயாரில்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும், பொலிஸ், காணி அதிகாரங்கள்கூட வழங்கப்படும் என்று வடக்குக்குச் சென்று அநுரகுமார திஸாநாயக்கவும், சஜித்தும் உறுதியளிக்கின்றனர். தேர்தல் நெருங்குவதாலேயே இவ்வாறு உறுதிமொழி வழங்கப்படுகின்றது. இதை வடக்கு - கிழக்கு மக்கள் நன்கு அறிவார்கள் - என்றார். (அ-ம-44)

# ரஷ்யப் படையெடுப்புக்கு வடகொரியா ஆதரவு



கீவ், ஜுன் 20

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடகொரியாவில் புடினுக்கு செங்கம்பள வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ரோஜா மலர்களுடன் அவரை வரவேற்றுள்ளனர். இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தென்னாபிரிக்கா வெற்றி




அமெரிக்க அணியுடனான ரி - 20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 8 சுற்றின் முதல் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பெற்றது.

நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் அமெரிக்க அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதற்கு அமைவாக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 4 இலக்குகளை இழந்து 194 ஓட்டங்களைப்பெற்றது. டி கொக் 40 பந்துகளில் 74 ஓட்டங்களையும், மார்க்கம் 32 பந்துகளில் 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலளித்து ஆடத் தொடங்கிய அமெரிக்க அணிக்கு அன்ட்ரிஸ் கோஸ் மாத்திரம் தனித்து சிறப்பாக ஆடினார். 47 பந்துகளில் 80 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். இறுதியில் 6 இலக்குகளை இழந்து 176 ஓட்டங்களை மாத்திரம் அந்த அணியால் பெற முடிந்தது. பந்து வீச்சில் ரபாடா 18 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார். ஆட்ட நாயகனாக டி கொக் தெரிவானார். (ஓ-5)

# மரண அறிவித்தல்



## முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம்

மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம் நேற்று (19.06.2024) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விசுவலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கன்னிகாதேவியின் அன்புக் கணவரும், செந்தில்குமரன் (அதிபர், யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை) அவர்களின் அன்புத் தந்தையும், ஜெனனி (ஆசிரியை, யா/ பரமேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமனாரும், கமலாதேவி, பவளபூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சங்கவியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
சி.செந்தில்குமரன் (மகன்)

(CS 782) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

யாழ் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்பு காணியும், யாழ் பலாலி வீதியில் பேபி போட்டோவுக்கு அண்மையில் 3 பரப்புடன் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: (CS 780) V-1

**077 723 2535**


# தையிட்டி விகாரை இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

தையிட்டியில் சட்டவிரோத விகாரைக்கு எதிராக இன்றுமுதல் மீண்டும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்ற வலியுறுத்தியும், பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க வேண்டுமெனக் கோரியும் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மீண்டும் தொடர் போராட்டம் மேற்படி விகாரைக்கு அருகில் ஆரம்பமாகவுள்ளது.

பொசன் முழுமதி தினமான நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் தொடர் போராட்டம் நிறைவுபெறும். (ம-66)

## தேர்திருவிழா

வவுனியா, ஜூன் 20

குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான நிலையில் இன்று வியாழக்கிழமை காலை தேர்திருவிழா இடம்பெறவுள்ளதுடன், நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (ம-22-110)

## 'ஜிசாட்- என் 2' விரைவில் விண்ணுக்கு

அதிவேகமான இணைய சேவைக்காக ஜிசாட் என்- 2 (ஜிசாட்-20) என்ற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை இஸ்ரோ வடிவமைத்துள்ளது.

இந்தச் செயற்கைக்கோள், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கான் - 9 என்ற ரொக்கெட் மூலமாக விரைவில் விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள், 4 ஆயிரத்து 700 கிலோ எடை கொண்டது. 14 வருடங்கள் வரையில் ஆயுட்காலம் கொண்டது. சுமார் 170 கிலோமீற்றர் தூரமும் 36 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவும் கொண்ட புவி வட்டப்பாதையில் நிறுத்தப்படவுள்ளது. (எ-இ)


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 26 . 12 . 1968



மறைவு 18 . 06 . 2024

அமரர்

**யோகேஸ்வரி அருளானந்தம்**

இன்றிருந்தார் நாளை இல்லாதிருப்பது
நியதி எனினும் நல்லவர்க்கும் அல்லவர்க்கும்
நன்மை மட்டுமே நாடிய நீயேன் சென்றாய்...
துயரினால் வாடும் அன்புச் சகோதரி
தனலட்சுமி தர்மகுலசிங்கம்

144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(CS/55427) J-1

பழமுதிர்சோலை காரைநகர்

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம்**



தோற்றம் 06.04.1930 மறைவு 19.06.2024

எமது பாடசாலை அதிபர் திரு. சி. செந்தில் குமரன் அவர்களின் பாசமிகு தந்தையார்
**அமரர் முத்துத்தம்பி சிவசுப்பிரமணியம்**
அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு அன்னாரின்குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களின் ஆத்மாசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை.**

## மரண அறிவித்தல்

**திருமதி யோகேஸ்வரி அருளானந்தன்**

(கருங்காலி, காரைநகர்)

பிறப்பு 26 12 1968



இறப்பு 18 06 2024

கருங்காலி காரைநகரை பிறப்பிடமாகவும் கொழும்பு W.A. சில்வா மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி யோகேஸ்வரி அருளானந்தம் அவர்கள் 18.06.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் புதல்வியும் **காரைநகர் இடைப்பிட்டியை** சேர்ந்த செல்லையா அருளானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் சாருஹா, அருஷன் ஆகியோரின் தாயாரும் சிவசங்கர் அவர்களின் மாமியாரும் உமாமகேஸ்வரன் - செல்வராணி தம்பதிகளின் சம்பந்தியும் தனலெட்சுமி, சுந்தரசிவம், ஜெகரட்ணம் (CC), யோகேஸ்வரன் (ஈசன்), புஸ்பராணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் 19.06.2024 புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 20.06.2024 இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு ஈமக்கிரியைகள் ஆரம்பித்து பொரளை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : - குடும்பத்தினர்-

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 11 . 1996



மறைவு 14 . 06 . 2024

**சிவகருணன் சாருஜன்**

நியூயோர்க், அமெரிக்காவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகருணன் சாருஜன் கடந்த 14.06.2024 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சிவகருணன் (குட்டி) - ரஜனி தம்பதியரின் மூத்த புதல்வனும், சாரங்கன், சங்கீதா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான க.சுப்பிரமணியம் (காசிப்பிள்ளை - மிருக வைத்தியர்), சிவபாக்கியம், கா.இராஜதுரை (அருமை - புகையிரத சாரதி) மற்றும் மனோகரிதேவி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சிவதாசன் மற்றும் Dr ரதினி காந்தநேசன் (போதனா வைத்தியசாலை), சிவபாலன் (UK), சிவகுமாரன் (கனடா), சிவராசா (மலேசியா), சிவநேசன் (UK), சிவஞானம் (கனடா) ஆகியோரின் பெறாமகனும், இ.ரமேஸ் (UK), ஹிமாவதி, கருணாவதி, உமாவதி (ஜேர்மனி) சுசிலாவதி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.06.2024) வியாழக்கிழமை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ.மாதவராஜா
**021 224 2046**

KKS வீதி, சுன்னாகம்.

(CS/55430) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொசனையொட்டி பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 20
பொசன் பண்டிகைக்காக சமய மற்றும் கலாசார நிகழ்வுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விசேட பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு முழுவதிலும் சுமார் ஆறாயிரம் பொசன் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதற்கென பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 370 பேரும், முப்படையைச் சேர்ந்த 607 பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் ரோந்துகள் மூலம் பிரதேச பாதுகாப்பை உறுதிப்படுத்து மாறும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

## 2.3 ரிக்டரில்...

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் பொதுமக்களால் உணரப்பட்ட பெருவெடிப்புச் சத்தமும், அதன் தொடர்ச்சியான அதிர்வுகளும் நிலநடுக்கத்தின் விளைவே என தேசிய புவிச்சரிதவியல் மற்றும் கனிமவள பிரிவு அறிவித்துள்ளது.

இந்த புவி நடுக்கத்தின் குவிமையம் தாண்டிக்குளத்துக்கும் கூமாங்குளத்துக்கும் இடைப்பட்ட மரிக்காரம்பளையாகும். இந்தக்குவிமையம்புவிமேற்பரப்பிலிருந்து 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிகழ்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அண்மைக்காலப் பகுதியில் இலங்கையின் கடற்பிராந்தியங்களிலும் நிலப்பகுதிகளிலும் சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் அதிக அளவில் ஏற்பட்டு வருகின்றன. இவற்றை எதிர்காலத்தில் மிகப்பெரிய அளவிலும் நிலநடுக்கங்கள் இடம்பெறலாம் என்பதற்கான சமிக்ஞைகளாகக் கருதலாம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். (அ-ம-66-110)

## காணிகள்...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன தமிழ் மக்களின் வயற்காணிகள், வீட்டுக்காணிகளை ஆக்கிரமித்து வர்த்தமானியில் வெளியிட்டுள்ளன. இந்தக் காணிகளை விடுவிக்குமாறு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 1985 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றின் ஆளுகைக்குள் இருந்த நிலைமையைப் பேணிக்கொண்டு ஏனைய காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத்திரும்பத்திரும்ப அறிவிப்பு விடுத்து வருகின்றார்.

ஆனால், வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன அது தொடர்பில் எதிர்மாறாகவே செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றையதினம் ஜனாதிபதியின் செயலர் தலைமையில் விசேட கூட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் ஆகியோரும், துறைசார் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், வடக்கின் மாவட்டச் செயலர்களும், மேலதிக மாவட்டச் செயலர்களும் பங்கேற்றனர்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் விடுவிக்கக்கோரிய காணியின் அளவை வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பன விடுவிக்கவில்லை என்பதை மாவட்டச் செயலர்களும் மேலதிக மாவட்டச் செயலர்களும் சுட்டிக்காட்டினர். அதைவிட புதிதாகக் காணிகளைவர்த்தமானியில்பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் சுட்டிக்காட்டினர்.

கோரிக்கை விடும் காணிகளை விடுவிப்பதற்கு சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தேவை என வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகங்கள் தெரிவித்ததுடன், அந்தக் காணிகளை விடுவிப்பதற்கான இணக்கத்தையும் வெளிப்படுத்தாமல் இழுத்தடித்தனர். இதனால் நேற்றைய கூட்டத்தில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. அதேவேளை, இது தொடர்பில் மீண்டும் கூடி ஆராய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. (அ-ஒ-5)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ்பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்டர், வடக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், பா.கஜதீபன், வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் தி.நிரோஷ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் த.சிவரூபன், கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் என். இன்பம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன், அகில இலங்கை மீனவ தொழிற்சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தலைவர் இ.முரளிதரன், யாழ்.மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் வ.பார்த்திபன் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தும் வகையிலான பதாகைகளையும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர். (அ-ம-66-23-125-66)

## அதிகாரப்...

நோக்கி நகரமுடியும். இருப்பதையும் இல்லாமல் செய்வதற்கு இடமளிக்க முடியாது. 13 ஆவது திருத்தத்தில் குறிப்பிட்டுள்ளவாறு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்கின்றார்கள். 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழ் நாட்டைப்போல் தனியான பொலிஸ் இருக்கப்போவதில்லை. இலங்கை பொலிஸின் ஓர் அங்கமாகவே வடக்கு - கிழக்கு பொலிஸ் இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இது அரசியல் தலைவர்களுக்குத் தெரியும். அப்படித் தெரிந்தும் இழுத்தடிக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு அதிகாரப்பரவலாக்கலை வழங்குவதன்மூலம் பொருளாதார வளர்ச்சியை அடையமுடியும். புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைப் பெறமுடியும். மாகாணசபை தொடர்பில் சுமந்திரன் எம்.பி.யால் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை இந்தச் சபையில் நிறைவேற்றி, அதிகாரப் பரவலாக்கலுக்குத் தயார் என்ற நம்பிக்கையை தலைவர்களும், நாடாளுமன்றமும் வழங்கவேண்டும். அப்போதுதான் ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்குகேட்டு வர முடியும்" - என்றார். (அ-ம-44)

## யாழ்...

ஏது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில், குரங்குகளால் தமது விவசாயச் செய்கை கடுமையாகப் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டி வருகின்றனர். எனவே, குரங்குகளைக் கட்டுப்படுத்தி விவசாயத்தை மேம்படுத்துவதற்காக வாயுத் துப்பாக்கிகளை வழங்குமாறு விவசாயிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, முதல்கட்டமாக விடுவிக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட 48 வாயுத் துப்பாக்கிகள் விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளன. ஜூலை மாதத்துக்குள் இந்தத் துப்பாக்கிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-125)

## ஜெய்சங்கர்...

படும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் ஜெய்சங்கர் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், ஜெய்சங்கரின் வருகை வெளிவிவகாரக் கொள்கைளுக்கு அப்பாற்பட்ட நகர்வுகளை மையப்படுத்தியதா என்ற கேள்வியும் கொழும்பில் எழவே செய்கின்றது. இந்தப் பயணத்தின்போது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களையும் ஜெய்சங்கர் சந்தித்துப் பேச்சு நடத்த வாய்ப்பிருப்பதாக நம்பப்படுகின்றது. (அ-ம-66)

## அகழ்வாராய்ச்சி...

மரபுரிமை மையம் சார்பாக பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தெரிவித்தார்.

இலங்கையின் பெருங்கற்கால பண்பாடுகள் நிறைந்ததாகக் கருதப்படும் ஆனைக்கோட்டையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு பகுதியில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

"வரலாற்றுத் துறைத் தலைவர், சக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களின் நீண்டகால முயற்சியின் பின்னர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனைக்கோட்டையில் அகழ்வாய்வை மேற்கொள்ளவுள்ளோம். இதன் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு நடைபெறும்" என பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் குறிப்பிட்டார். (அ-ஒ-125)

## அமைச்சுப்...

சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் மைத்திரி அணியின் முக்கியஸ்தருமான பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"விரைவில் பதவி விலகுமாறு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு ஆளுங்கட்சியினரும், ஜனாதிபதியும் அழுத்தம் கொடுத்துள்ளனர். கட்சியின் அரசியல் சபைக் கூட்டத்தின்போது இது பற்றி விஜயதாஸ ராஜபக்ச எமக்குத் தெரியப்படுத்தினார். என்ன நடக்கின்றது என்பது பற்றி பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சுதந்திரக்கட்சி எதிரணியில்தான் உள்ளது"- என்றார். (அ-ம-44)

## உழவியந்திரத்தோடு...

நீர்வேலிப் பகுதியில் இந்த விபத்து நேற்றுமுன் தினம் இரவு 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. வேதரன் கலைப்பிரியன் (வயது - 16) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான். மோட்டார்சைக்கிளை அந்தச் சிறுவனே செலுத்தி வந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உழவியந்திரத்தின் சாரதி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்புவிசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## ரணிலின்...

இருந்த வெளிநாட்டுக்கடன் தற்போது 100 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும், 52.6 பில்லியன் டொலராக இருந்த உள்நாட்டுக் கடனும் 57.2 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாகவும் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-6)

## சம்பளத்தை...

துள்ளது. அடுத்த வருடத்தில் நாட்டின் கையிருப்பு வழமை நிலைக்குத் திரும்புமாயின் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்படுமெனவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-66)

## மனைவியை...

வழங்கப்பட்டது. இதன்படி உயிரிழந்த பெண்ணின் கணவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு அவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைதானத்தில் வாள்வெட்டு விளக்கமறியல் நீடிப்பு

மீசாலையிலுள்ள விளையாட்டு மைதானத்துக்குள் நுழைந்து வாள்வெட்டில் ஈடுபட்ட நிலையில் ஊர் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ஐவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி மாலை 5 மணியளவில் 12 பேர் கொண்ட குழுவொன்று மதுபோதையில் வாள் மற்றும் பொல்லுகளுடன் மைதானத்துக்குள் உட்புகுந்து அங்கு நின்றிருந்தவர்கள் மீதும் வீதியால் பயணித்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தது.

இதனை அவதானித்த ஊரவர்கள் மற்றும் விளையாட்டுக் கழக வீரர்கள் தாக்குதல் நடத்திய காடையர் கூட்டத்தை சுற்றி வளைத்து நால்வரை மடக்கிப் பிடித்து கட்டி வைத்து முறையாக கவனித்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஏ.யூட்ஸன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஐந்து சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் மேலும் இருவர் கைதுசெய்யப்பட வேண்டியிருப்பதனால் சந்தேகநபர்களுக்களுக்கு பிணை வழங்க கொடிகாமம் பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தனர்.

இதனடிப்படையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

# ஊடகவியலாளர் வீடு மீது தாக்குதல் 3 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவினரால் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த ஒருவரும், கிளிநொச்சியில் வைத்து மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டனர். அச்சுவேலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள்
முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்ட அவர்கள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (எ-125-66-26)

# இலவச நடமாடும் சேவை

உடுவில் கால்நடை மருத்துவர் அலுவலகம் ஏற்பாடு செய்த இலவச கால்நடை மருத்துவ நடமாடும் சேவை, குப்பிழான் கன்னிமார் கோவிலடியில் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 3 மணி வரை நடைபெறவுள்ளது.

இதன்போது கால்நடைகளுக்கான மருத்துவ சேவை, கால்நடை வளர்ப்புத் தொடர்பான ஆலோசனை, தடுப்பு மருந்து வழங்கல், மாடுகளுக்குக் காதடையாளமிடல், பண்ணைகளைப் பதிவு செய்தல், திணைக்களப் பிரசுரங்கள் வழங்குதல் போன்ற சேவைகள் இலவசமாக வழங்கப்படும். குப்பிழான் கிராமத்தவர்களுடன் அயற் கிராமத்தவர்களும் குறித்த சேவையில் கலந்துகொண்டு பயன்பெற முடியுமென உடுவில் கால்நடை மருத்துவ அலுவலகப் பொறுப்பதிகாரி மருத்துவர் ஆர்.மீனயோகினி தெரிவித்தார். (ப-66)

# விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த மூவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கடந்த 8ஆம் திகதி பார்வையாளர் நேரத்தில் புகுந்த சுமார் 10 பேர் நோயாளியை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றவில்லை எனக் கூறி தர்க்கத்தில் ஈடுபட்டதுடன் அங்கு கடமையில் இருந்த தாதியர் மற்றும் மருத்துவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து, தாதியர் ஒருவரையும் காவலாளி ஒருவரையும் தாக்கி விட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த 15 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்பட்டுத்தப்பட்டதை அடுத்து குறித்த மூவரையும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டப்பபட்டிருந்தது.

இந்நிலையில் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் ஜூலை 2ஆம் திகதி வரை மூவருக்குமான விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டுள்ளார். (ஒ-100)

# ரணிலின் கருத்துக்கு கடும் கண்டனம்

கொழும்பு, ஜூன் 20

பால்நிலை சமத்துவம் தொடர்பான சட்டவரைவுக்கு உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைக்கு எதிராக ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் கூற்று நீதித்துறைக்கும் உயர்நீதிமன்றத்துக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்ற பரிந்துரைக்கு எதிராக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்கப்போவதாக ஜனாதிபதி நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார். இது அரசமைப்பில் உயர்நீதிமன்றத்துக்கு உள்ள அதிகாரத்தை இல்லாமல் செய்யும் செயற்பாடு. நீதித்துறை எதுவித வெளி தலையீடுகளுமின்றி சுயாதீனமாக இயங்க வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு என்றும் சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ஒ-6)


மு.அநாதரட்சகன எழுதிய, 'பின் தொடரும் வலி' எனும் சிறுகதைத் தொகுப்பு நூல், யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. (ப)


பண்டத்தரிப்பு இந்து கைப்பந்தில் சம்பியன்

வலிகாமம் கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுகள் வரிசையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கைப்பந்துப் போட்டியில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி சம்பியன் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், நான்காம் இடத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (க-555)

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684
CS/777) J-1

வேலையாட்கள் தேவை
கிளிநொச்சியிலுள்ள Bake House இற்கு Male/Female வேலையாட்கள் தேவை.
➤ Cake, Icing ➤ Bun
➤ Bread ➤ Pizza
தொடர்பு:- 077 711 1831
(CS/55433) J-1

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் மணியாக
17 . 08 . 1936



விண்ணில் தெய்வத்துள்
21 . 05 . 2024

அமரர் கிறகோறி யேசுராஜன்
(ஓய்வு நிலை ஆசிரியர்)

பாரங்கள் பல சுமந்து எம்மைப்
பாரினிலே மிளிரவைத்த தந்தையே
வாரங்கள், மாதங்கள், வருடங்கள் கடந்தாலும்
வையகத்தே உங்களை மறவோமே
நேரங்கள் பாராது எமக்காக உழைத்தே
நேர்வழியில் எம்மை வாழ வைத்த தெய்வமே
ஈரவிழிகாயாது இன்றும் நாம் வாடுகின்றோம்
இப் புவியில் இனியுங்களை காண்போமா ஐயா?

எமது குடும்பத் தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆறுதல் கூறி எம் துயரத்தில் பங்குகொண்ட அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பான நன்றிகள்.

இல. 60, சென் பெனடிக்ற் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிரிவில் துயருறும்
குடும்பத்தினர்.
075 601 6314
(cs.55419) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.